# அரசறிவியல்

## அரசியலமைப்பு மாதிரிகள்



© www.e-thaksalawa.moe.gov.lk

தேர்ச்சி 04

உலகில் நிலவும் அரசியலமைப்பு மாதிரி வகைகளின் அடிப்படையில் அரசியலமைப்புக்களை பகுத்தாயும் ஆற்றலை வெளிப்படுத்துவார்.



## கூட்டாண்மை சமஷ்டி முறை / நேசக் கூட்டமைப்பு ஆட்சி /கூட்டுச் சமஷ்டி

1

கூட்டுச் சமஷ்டி என்பது பொதுவழக்கில் ''உடன்பாடு'' எனக் கருதப்படும். கூட்டுச் சமஷ்டி என்பது சுயாதீன அரசு அலகுகளுக்கிடையில் நெருங்கிய ஒத்துழைப்பை ஏற்படுத்தி கொள்ளுவதற்கு அவற்றுக்கிடையில் ஏற்படுத்திக் கொண்ட உடன்பாடாகும். (''A confederation is a union of sovereign States, United for purposes of common action of ten in relation to other States.'')

2

**கூட்டுச் சமஷ்டி காரணிகள்**

- பாதுகாப்பு
- பொதுப்பண அலகு பொருளாதார நலன்
- வெளிவிவகாரம் பொதுத்தேவை

3

இதன்படி விசேட நோக்கங்களை அடைந்து கொள்ளும் எதிர்பார்ப்பில் இறைமை அதிகாரம் கொண்ட அரசுக்களால் மத்திய அரசாங்கத்திற்கு வரையறுக்கப்பட்ட அதிகாரத்தைப் பெற்றுக் கொடுக்கும் அரசியலமைப்பு முறையாகும்.

4

''பொதுப் பாதுகாப்பு வளம் ஆகியவற்றைப் பெறுவதற்காக இதுவரை தனித்து முழு உரிமைகளோடு இயங்கிய நாடுகள் ஒன்றுசேர்ந்து ஓர் அமைப்பிற்கு உட்படுவது கூட்டிணைவு'' என பயமன் (fireman) குறிப்பிடுகின்றார்.

தொகுப்பு : திருமதி.பி.ஜனேந்திரன் , ஆசிரியர் (அரசறிவியல்) (யா/சுண்டிக்குழி மகளீர் கல்லூரி,)

கணினி வடிவமைப்பு : செல்வி.இ.ஆ.அ.ஜெஸ்லின் , ஆசிரியர் (த.தொ.தொ.) (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## நேசக் கூட்டாட்சியின் இயல்புகள்/ கூட்டாண்மை சமஷ்டி முறையின் இயல்புகள்

01 நேசக்கூட்டாட்சி அமைப்பானது பொது அரசாக தொழிற்பட வேண்டும்.

02 இந்த பொதுஅரசுக்கு கூட்டாண்மை சமஷ்டியில் இணைந்துள்ள இறைமை பொருந்திய அரசுக்களின் பிரஜைகள் மீது நேரடியான கட்டுப்பாடு இருக்காது.

03 அங்கத்துவ அரசுகளின் பிரஜைகளிடம் இருந்து வாக்காளர் என்ற முறையினைப் பயன்படுத்த முடியாது.

04 பொதுஅரசு என்ற வகையில் வரி விதிப்புகளோ வரி அறவீடோ இவ்வரசு நேரடியாகச் செய்வதில்லை.

05 முக்கிய கொள்கைத் தீர்மானங்கள் யாவும் அங்கத்துவ அரசுகளின் உடன்பாட்டுடன் மேற்கொள்ளப்படுவதால் ''சுயாதீன அரசுகளின் சுதந்திர தன்மை பொருந்திய தன்மைக்கு இடையூறு காணப்படுவதில்லை.

தொகுப்பு : திருமதி.பி.ஜனேந்திரன் , ஆசிரியர் (அரசறிவியல்) (யா/சுண்டிக்குழி மகளீர் கல்லூரி,)

கணினி வடிவமைப்பு : செல்வி.இ.ஆ.அ.ஜெஸ்லின் , ஆசிரியர் (த.தொ.தொ.) (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

06

கூட்டாண்மை சமஷ்டியில் மத்திய அரசாங்கம் பலம் குறைந்தது. பிரச்சினைக்குரிய விடயங்களில் தீர்மானம் எடுக்கும் பலமற்றது.

07

வளப்பங்கீடு செய்வதற்கு பொதுஅரசுக்கு ஆற்றல் இல்லை.

08

பிராந்திய அரசாங்கம் தமது தனித்துவத்தை பாதுகாத்துக் கொண்டு ஏனைய பிராந்திய அரசாங்கங்களுடன் ஐக்கியமாக (நேசமாக) செயற்படலாம்.

09

அரசாங்கம் பலவீனமானது.

10

தாம் விரும்பும் போது பிரிந்து செல்லும் உரிமை பிராந்திய அரசாங்கங்களுக்கு காணப்படுகின்றது. இவை தொடர்பான யாப்பு ஏற்பாடு நாட்டுக்கு நாடு வேறுபட்டுக் காணப்படும்.

தொகுப்பு : திருமதி.பி.ஜனேந்திரன் , ஆசிரியர் (அரசறிவியல்) (யா/சுண்டிக்குழி மகளீர் கல்லூரி,)

கணினி வடிவமைப்பு : செல்வி.இ.ஆ.அ.ஜெஸ்லின் , ஆசிரியர் (த.தொ.தொ.) (யா/புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

## கூட்டு சமஷ்டி முறைமைக்கு சில உதாரணங்கள்

.

1291 - 1847 வரையான காலத்தில் சுவிஸ்லாந்து கூட்டு சமஷ்டியாக இருந்தது.

1776 - 1789 வரையான காலத்தில் ஐக்கிய அமெரிக்கா கூட்டு சமஷ்டியாக இருந்தது.

பேனலெக்ஸ் நாடுகளின் பொருளாதார ஒன்றியம், கரிபியன் நாடுகளின் சமூகம் (Caeicom), சுதந்திர நாடுகளின் பொதுநல அமைப்பு, ஐரோப்பிய யூனியன்



01.கூட்டாண்மை சமஷ்டி முறைமையின் பண்புகளை விளக்குக?

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………

………………………………………………………………………………………………



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk